Sri T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்த மண்வள ஆராய்ச்சி நிலையம் ஒன்றை தஞ்சாவூர் ஜில்லாவில் வைக்கப்போவதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த ஆராய்ச்சி நிலையத்தை எப்போது, எந்த இடத்தில் வைக்கப்போகிறார்கள் என்பதைத் திட்டமாகச் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

a.m.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தஞ்சை ஜில்லாவில் ஆடுதுறையில் ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. அது கனம் அங்கத்தினருடைய தொகுதியைச் சார்ந்தது என்று நினைக்கிறேன். அங்கேயே மண்வள ஆராய்ச்சி நிலையத்தை வைப்பது என்று உத்தேசம்.

Sri S. M. ANNAMALAI : ஜமீன்தாரி ஏரியாக்களை ரயத்வாரியாக மாற்றும்போது மண்வளம் 1-ம் தரம், 2-ம் தரம் என்று நிர்ணயிக்கப்படுகிறதே, இது இந்த நிலையங்களில் பரிசீலனை செய்து நிர்ணயிக்கப்படுகின்றனவா அல்லது ஜமீன் நிலங்களுக்கு என்று தனியாக ஆட்களை நியமித்திருக்கிறார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்னேன். தங்கள் தங்கள் மண் வளத்தை யார் யார் பரிசோதனை செய்து கொள்ளவேண்டும் என்று அக்கறை உள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் இந்தக் கோவை மண்வள ஆராய்ச்சி நிலையத்திற்கு மண்ணை அனுப்பி பரிசோதனை செய்துகொள்ளலாம். அவர்களுடைய கோரிக்கை கவனிக்கப்படும்.

Sri S. NAGARAJA MONIGAR : நமக்கு மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது அதிக உணவு உற்பத்தி ஆகையால் அதற்கு இந்த மண் வள ஆராய்ச்சி மிகவும் அவசியமானது என்று அரசாங்கம் கருதவில்லையா ? அப்படியானால் மற்ற ஜில்லாக்களில் உள்ள மண்வளத்தையும் அவர்களே ஆராய்ச்சி செய்வதற்கு முயற்சி எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : உணவு உற்பத்தி பெருக மண்வள பரிசோதனை அவசியமானது, முக்கியமானது என்பதை அரசாங்கம் உணர்ந்துதான் இருக்கிறது. ஆகவே தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மண்வள ஆராய்ச்சி நிலையத்தை அமைக்கவேண்டும் என்று தீர்மானித்து இப்பொழுது தஞ்சையில் ஒன்று அமைக்கப்படுகிறது. மற்ற ஜில்லாக்களில் உள்ள சில விவசாயிகள் செய்வது போல மற்றவர்களும் தங்கள் மண்வளத்தைப் பரிசோதனை செய்து அதனால் பயன் அடையலாம்.

Sri V. K. KOTHANDARAMAN : 1960ஆம் எப்ரல் 1-ம் தேதி முதற்கொண்டு ஆந்திர ராஜ்யத்தில் இருந்து சென்னை ராஜ்யத்தோடு சேர்ந்திருக்கக் கூடிய பகுதிகளில் நிலம் மிக மோசமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அங்கே மண்வள ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஏற்பாடு செய்யப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எப்ரல் மாதத்தில் இருந்து நம் ராஜ்யத்தோடு சேர்ந்த பகுதி மிகவும் மோசமானது என்று சொல்வதற்கு இல்லை. அதை அந்தப் பகுதி அங்கத்தினரே ஒப்புக் கொள்ளமாட்டார்கள். சில பிற்போக்கான பகுதிகளும் இருக்கலாம். ஆனால் அந்தப் பகுதி மண்வளம் குறைந்தது என்று சொல்வது அபசாரம். மற்ற மாவட்டங்களில் உள்ளவர்கள் அக்கறை எடுத்துக்கொள்வது போல இந்தப் பிரதேசத்தில் உள்ளவர்களும் அக்கறை எடுத்துக்கொண்டு தங்கள் மண் வளத்தைப் பரிசோதனை செய்துகொள்ளலாம். நல்ல முறையில் விவசாயம் செய்யலாம்.

Ex-Madras Electric Supply Corporation, Limited

• 610 *Q.*—Sri K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the date of taking over of the ex-Madras Electric Supply Corporation, Limited ;

7th April 1960]

(*b*) the reason for not regularizing the services of the ex-Corporation employees after the Corporation was taken over ; and

(*c*) the reason for constituting a 'special cadre' and maintaining the same, in spite of specific orders of Government for abolishing it ?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) 29th August 1947.

(*b*) The employees of the ex-Madras Electric Supply Corporation taken over by Government were retained in service provisionally till 1949 when orders were issued for the regular absorption in Government service of all the qualified technical staff in corresponding posts in the State and Subordinate Services and the remaining staff in a "Special cadre", with retrospective effect from 29th August 1947. All the qualified technical personnel were accordingly absorbed in Government service by 19th May 1952. In 1953, the special cadre ministerial staff, who were qualified, were also regularly absorbed in the Madras Ministerial Service with effect from 29th August 1947.

(*c*) The Government constituted a "special cadre" in 1949 for the absorption of those employees of the ex-Madras Electric Supply Corporation, who did not either possess the required qualifications or were drawing salaries higher than those of corresponding posts in Government service. Subsequently, the Government decided that the persons who were absorbed in a "special cadre", might be regularly absorbed in the Operation Subordinate Service or the Madras Ministerial Service, by relaxing the relevant rules in their favour. Accordingly, all the subordinate technical staff in the "special cadre" except a few isolated categories, have already been absorbed in the Operation Subordinate Service. As regards absorption of the remaining non-technical employees in the Madras Ministerial Service, the matter is under the active consideration of the Madras State Electricity Board.

SRI K. R. VISWANATHAN: Sir, may I know when the Electricity Board will come to a decision in regard to the remaining categories of men whose services are to be regularized ?

THE HON. SRI V. RAMAIAH: They have stated that orders will be issued very shortly.

SRI K. VINAYAKAM: Are there still some employees who are classified as temporary employees, and who were originally employed by the ex-Madras Electricity Corporation ? If so, how many are they, and why are they still classified as temporary hands ?

THE HON. SRI V. RAMAIAH: I do not know whether they are classified as temporary. But, as I have already stated, there are still a few men who have to be absorbed, and they will be absorbed soon.

Electricity accidents

* 611 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

1959-ம் ஆண்டு டிசம்பர் மீ 16உ நட்சத்திரக் குறியிடாத கேள்வி எண் 100-க்கு அளித்த பதிலையொட்டி மின்சார விபத்துக் குள்ளானவர்களுக்கு எந்த அடிப்படையில் நஷ்ட ஈடு தரப்படுகின்றன ?